RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-4 | இதழ்-115 | மே.2, 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## "போர் துவக்கத்தை நீங்கள் சொல்லுங்கள், முடிவை நாங்கள் சொல்கிறோம்" பாகிஸ்தான் 'உதார்'

இஸ்லாமாபாத்: மே.2-

போர் எங்கே, எப்போது துவங்குவது என நீங்கள் (இந்தியா) முடிவு செய்யுங்கள், இறுதி முடிவை நாங்கள் (பாகிஸ்தான்) அது எங்கு முடியும் என்பதை சொல்கிறோம்' என பாகிஸ்தான் ராணுவ அதிகாரி ஒருவர் அடாவடியாக பேசி இந்தியாவை கடுப்பேற்றி உள்ளார்.

சமீபத்தில் காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது நடந்த பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவில் பெரும் பதட்டம் ஏற்பட்டுள்ளது.



பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா பல கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்கிடையில், பாகிஸ்தான் ராணுவ செய்தித் தொடர்பாளர் லெப்டினன்ட் ஜெனரல் அகமது ஷெரீப் சவுத்ரி இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லெப்டினன்ட் ஜெனரல் அகமது ஷெரீப் சவுத்ரி கூறியிருப்பதாவது: இந்தியா ஏதேனும் தாக்குதலை நடத்தினால், அதற்கு வலுவான மற்றும் நன்கு சிந்திக்கப்பட்ட பதிலடி கொடுக்கப்படும். 'தாக்குதல் நடைபெறும் இடத்தை இந்தியா தீர்மானிக்கும், ஆனால் அது எங்கு முடியும் என்பதை நாங்கள் தீர்மானிப்போம்'. தரைவழி, வான்வழி மற்றும் கடல்வழி என மூன்று முனைகளிலும் பதிலடி கொடுக்க பாகிஸ்தானின் ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை முழுமையாக தயாராக இருக்கிறது.

பஹல்காம் தாக்குதலுக்குப் பின்னால் பாகிஸ்தான் இருப்பதாக இந்தியா எப்படி ஒரு சில நிமிடங்களில் முடிவு செய்தது? தாக்குதல் நடந்த இடம் எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டிலிருந்து (எல்ஓசி) சுமார் 230 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வளவு கடினமான பாதை வழியாக யாராவது 10 நிமிடங்களில் அங்கு எப்படி அடைய முடியும்?' தேர்தலுக்கு லாபம் பார்க்கவே முஸ்லிம்களுக்கு எதிரான சூழலை உருவாக்க இந்திய அரசு பயங்கரவாதம் தொடர்பான சம்பவங்களைப் பயன்படுத்துகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## 'வாகனத்தை பின் தொடராதீர்கள்': ரசிகர்களுக்கு விஜய் அறிவுரை

சென்னை: மே.2-

கொடைக்கானலில் நடக்கும் ஜனநாயகன் படப்பிடிப்புக்காக நடிகர் விஜய் மதுரைக்கு விமானத்தில் சென்று, கொடைக்கானலுக்கு காரில் செல்ல உள்ளார். இதனையறிந்த ஏராளமான ரசிகர்கள் மதுரை விமான நிலையத்தில் கூடி உள்ளனர்.

இந்நிலையில், நடிகர் விஜய் சென்னை விமான நிலையத்தில் நிருபர்களை சந்தித்தார். த.வெ.க., கட்சி துவக்கிய பிறகு விஜய் நிருபர்களை சந்திப்பது இது முதல் முறையாகும்.

அப்போது விஜய் கூறியதாவது: மதுரை மக்களுக்கு என்னுடைய வணக்கம். எனது வேலைக்காக நான் செல்கிறேன். ஜனநாயகன் படப்பிடிப்புக்காக நான் செல்கிறேன். கூடிய சீக்கிரம் மதுரை மண்ணில், கட்சி சார்பாக வேறு ஒரு சந்தர்ப்பத்தில் உங்களை சந்திக்கிறேன். ஒரு மணி நேரத்தில் நான் என் வேலையை பார்க்க போகிறேன். நீங்களும் பாதுகாப்பாக உங்கள் வீட்டிற்கு செல்லுங்கள்.

மதுரையில் என்னுடைய வேன், கார் பின்னாடி யாரும் பின் தொடர வேண்டாம். பைக்கில் வேகமாக வருவது, ஹெல்மெட் இல்லாமல் செல்வது, டூவீலர் மேல் நின்று பயணிப்பது போன்று வராதீர்கள். இதனை பார்ப்பது மனதிற்கு கஷ்டமாக உள்ளது. மதுரை விமான நிலையத்தில் இதனை சொல்ல முடியாது. சூழ்நிலை எப்படி இருக்கும் என தெரியவில்லை. இவ்வாறு விஜய் கூறினார்.

# 'திராவிட மாடல் ஆட்சிக்கு தொழிலாளர் தோழர்கள் பக்கபலமாக இருக்க வேண்டும்'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை: மே.2-

தொழிலாளர்களுக்காக உழைக்கின்ற, பாடுபடுகின்ற இந்த திராவிட மாடல் ஆட்சிக்கு தொழிலாளர் தோழர்கள் பக்கபலமாக இருக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, மே தினப் பூங்காவில் நடைபெற்ற மே தின விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: "உருண்டோடுகின்ற ரயிலை ஓட்டக்கூடியவர் ஒரு தொழிலாளி தான்! இழையை நூற்று நல்லாடை நெய்பவன் யார் என்று கேட்டால் அவரும் தொழிலாளி தான்! இரும்பு காய்ச்சி உருக்குபவன் யார் என்று கேட்டால் அவரும் தொழிலாளி தான்! மிராசுதாரர்கள் மேனாமினுக்கி வாழ்க்கைக்கான பொருள்களை உருவாக்கித் தரக்கூடியவர்கள் தொழிலாளியாக தான் இருக்கிறார்கள்.

கடலில் மூழ்கி முத்து எடுப்பவனும் தொழிலாளியாக தான் இருக்கிறான். உழுது நன்செய் பயிரிடுபவனும் தொழிலாளி தான். அந்தத் தொழிலாளியின் இனம் மகிழ்ந்து கொண்டாடும் ாள்தான் மே தினம்" என்று நம்முடைய அண்ணா சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அத்தகைய சிறப்புமிக்க, தொழிலாளர் தோழர்கள் தங்கள் உரிமையை வென்றெடுத்த மே நாளில் உலகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் என்னுடைய நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திராவிடர்கள் என்றாலே தொழிலாளர்கள்தான் என்று பெரியார் பெருமையோடு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். 1932ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை தமிழில் மொழிபெயர்த்து தந்தவர் தான் தந்தை பெரியார்.

ரஷ்யா போன்ற பல்வேறு நாடுகளுக்குச் சென்றுவிட்டு தாயகமாம் தமிழகத்திற்கு பிய தந்தை பெரியார், இனி அனைவரையும் தோழர்கள் என்று அழைக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய சென்னை நகரம் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தொழிற்சங்க செயல்பாடுகளின் முக்கிய மையமாக இருந்தது. எட்டு மணி நேரம் வேலை எனும் உரிமைப்போரில் வென்றதற்கு இந்தியாவிலேயே முதன்முதலில், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் தலைமையில் மே தினம் கொண்டாடப்பட்டது இந்த சென்னை மாநகரத்தில் தான் என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.



அதற்கும் முன்பே, இந்தியத் தொழிலாளர்களின் வேலை நேரத்தை 12 மணி நேரமாக குறைக்க பெரும் முயற்சிகளை நீதிக் கட்சித் தலைவரான டி.எம்.நாயர் எடுத்கிறார். "உழைப்புக்கு மதிப்பளிப்பது உண்மையாக இருக்க வேண்டும் என்று சொன்னால், உழைப்பவனுக்கு முதலில் மதிப்பளிக்க வேண்டும்" என்றார் அண்ணா. அதன்படியே, 1967ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் மே1 அன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறையை அண்ணா கொண்டு வந்தார்.

அதற்கு பிறகு பொறுப்பேற்ற கருணாநிதி அந்த மே 1 விடுமுறை நாளை சட்டமாக்கி தந்தார். அதற்கு பிறகு சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது, மே 1 நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலத்திற்கும் தொழிலாளர் தினத்தை ஊதியத்தோடு கூடிய விடுமுறையை அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து, கருணாநிதி அதையும் நிறைவேற்றி தர பாடுபட்டார் என்பதும் உங்களுக்கெல்லாம் நன்றாக தெரியும்.

இந்தப் பகுதியில் இங்கே நின்று கொண்டிருக்கிறோமே இந்த மே தின பூங்கா இதையும் உருவாக்கித் தந்தவர் தான் கருணாநிதி. பூங்காவை மட்டும் அல்ல, அதில் உள்ளே அமைந்தக்கூடிய நாங்கள் எல்லாம் சென்று மலர் வளையம் வைத்து, எங்கள் அஞ்சலியை, எங்கள் மரியாதையை, வணக்கத்தை செலுத்திவிட்டு வந்கிறோமே அந்த நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தித் தந்தவரும் கருணாநிதி தான் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு எடுத்துச் சொல்லி, இன்றைக்கு தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் மூலமாக இந்த நான்கு ஆண்டு காலத்தில் எத்தனையோ திட்டங்களை, எத்தனையோ சாதனைகளை தேர்தல் நேரத்தில் அறிவித்தக்கூடிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றித் தந்து கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், அதிலும் குறிப்பாக தொழிலாளர்களுக்காக செய்கக்கூடிய சாதனைகள் ஒன்றிரண்டை நான் உங்களிடத்தில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால்,

‹ கடந்த நான்காண்டு காலத்தில் 28 லட்சத்து 87 ஆயிரத்து 382 அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு 2 ஆயிரத்து 461 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியிருக்கிறோம்.

‹ உணவு மற்றும் பிற பொருள்களை டெலிவரி செய்யும் நிமிநி (கிக்) தொழிலாளர்களுக்கும், தமிழ்நாடு உப்பளத் தொழிலாளர்களுக்கும் தனி நல வாரியத்தை அமைத்கிறோம்.

‹ பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் உயிரிழந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கி, அதையும் நிறைவேற்றித் தந்து கொண்டிருக்கிறோம்.

‹ 20 அமைப்பு சாரா தொழிலாளர் வாரியங்களில், 202124 காலக்கட்டத்தில் 16 லட்சம் ஊழியர்கள் புதிதாக பதிவு செய்கிறார்கள்.

‹ கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அமரும் உரிமையை கட்டாயமாக்கி அரசாணையை வெளியிட்டிருக்கிறோம்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, உலக மாமேதை பொதுவுடைமை தத்துவத்தை அளித்த பிதாமகன் கார்ல் மார்க்ஸ் சிலையை சென்னையில் அமைப்போம் என்று நாம் சட்டமன்றத்தில் அறிவித்கிறோம். அதுவும் விரைவில் அமைக்கப்பட இருக்கிறது.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். இதன் மூலமாக, தொழிலாளர்களும் வளர்ந்து வருகிறார்கள். தொழில் வளர்ச்சிக்கு இலக்கு வைத்பது மாதிரியே தொழிலாளர் வளர்ச்சிக்கும் இலக்கு வைத்து இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எந்த முதலீட்டுத் திட்டத்தை தொடங்கி வைத்தாலும், எந்த விஷீஹி ஒப்பந்தம் கையெழுத்திட்டாலும், அப்போது நான் முதலாவதாக கேட்பது என்னவென்றால், எவ்வளவு பேருக்கு வேலை தருவீர்கள் என்ற கேள்வியைத்தான்.

வேலை தருபவர் பணியாளர் ஆகியோர் இடையிலான உறவை சமரசத்தின் மூலமாக நாம் சமப்படுத்தவேண்டும், பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலமாக முடிவுக்கு கொண்டு வரவேண்டும். அப்படித்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இது சாமானிய மக்களுக்காக, சாமானியர்களின் ஆட்சி என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம்.

என்றைக்கும் உங்கள் கூட உங்களுக்காக நிற்கும், உங்களில் ஒருவன்தான் நானும், நம்முடைய அரசும். இந்த நாடே சமத்துவபுரமாக மாற வேண்டும் என்பதுதான் எங்களின் இலட்சியம், கொள்கையாக வைத்து இலக்காக பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். இதை மனதில் வைத்துதான் அரசு பல திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கிறது.

இன்னும் ஒரு வார காலத்தில், திராவிட மாடல் ஆட்சி உருவாகி, நான்காவது ஆண்டை நிறைவு செய்து, 5ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறோம். எனவே, மே தினம் கொண்டாடக்கூடிய இங்கே இருக்கக்கூடிய தொழிலாளர் தோழர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, உங்களுக்காக உழைக்கின்ற, பாடுபடுகின்ற இந்த திராவிட மாடல் ஆட்சிக்கு நீங்கள் என்றைக்கும் உறுதுணையாக இருந்து இந்த ஆட்சிக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என்று அந்த உறுதியை இந்த நல்ல நாளில் எடுத்துக் கொள்வோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சென்னை எல்லை சாலைத் திட்டம் பகுதி 3 பணிகளை தொடங்கி வைத்தார் உதயநிதி ஸ்டாலின்

திருவள்ளூர்: மே.2-

திருவள்ளூர் அருகே, ஈக்காடுகண்டிகையில், சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் பகுதி3 பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழகத்தின் வடக்கு மற்றும் தென் மாவட்டங்களிலிருந்து எண்ணூர் காமராஜர் துறைமுகம் செல்லும் கனரக வாகன போக்குவரத்தால் நெருக்கடி ஏற்படுகிறது. இதனை குறைப்பதற்கு, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்டங்களில் இருந்து எண்ணூர் காமராஜர் துறைமுகம் நோக்கி செல்லும் கனரக வாகனங்கள், தெற்குப் பகுதிகள் மற்றும் அண்டை மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்கள் எண்ணூர் மற்றும் காட்டுப் பள்ளி துறைமுகங்களுக்கு எளிதாக சென்றடையவும், சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் வணிக மற்றும் தொழில் வளங்களை அதிகரிக்கவும் சென்னை எல்லை சாலை



அமைக்க தமிழக அரசால் திட்டமிட்டப்பட்டது.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில், எண்ணூர் காமராஜர் துறைமுகத்திலிருந்து மாமல்லபுரம் வரை 132.87 கி.மீ. நீளம் அமைக்கப்பட உள்ள இந்த சென்னை எல்லை சாலைத் திட்டத்தில், பகுதி1 மற்றும் 2 பணிகள் ஏற்கனவே நடைபெற்று வருகிறது. இந்நிலையில், சென்னை எல்லை சாலைத் திட்டம் பகுதி3 பணி தொடக்க விழா வியாழக்கிழமை காலை ள்ளூர் அருகே உள்ள ஈக்காடுகண்டிகையில் நடைபெற்றது.

இவ்விழாவில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் பகுதி3 பணிகளை, ள்ளூர் புறவழிச்சாலை முதல் ஸ்ரீபெரும்புதூர் வரை ரூ. 2,689.74 கோடி மதிப்பில் 30.10 கி.மீ., நீளத்துக்கு, சேவை சாலைகளுடன் கூடிய புதிய ஆறு வழிச்சாலை அமைக்கும் பணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், பொதுபணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் பிரதாப், எம்எல்ஏக்களான கிருஷ்ணசாமி, வி.ஜி.ராஜேந்திரன், சந்திரன் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை உயரதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நாடு முழுவதும் மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பு: ஓபிஎஸ் வரவேற்பு

சென்னை: மே.2-

மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த ஒப்புதல் அளித்துள்ள மத்திய அமைச்சரவை முடிவுக்கு முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவற்றில் அனைவருக்கும் சம உரிமையும், சம வாய்ப்பும் வழங்க வேண்டுமென்றால், சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க வேண்டியது அவசியம் என்ற நிலை இருந்தபோதிலும், இதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு இருந்த நிலையிலும், இதன் அடிப்படையில் கர்நாடகா, பிஹார் போன்ற மாநிலங்களில் சாதிவாரி



கணக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையிலும், இதனை நிறைவேற்ற திமுக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

மாறாக, சாதிவாரி கணக்கெடுப்பினை மத்திய அரசு எடுக்க வேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் திமுக அரசு தீர்மானம் நிறைவேற்றியது. இதனைக் கண்டித்து நான் உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் அறிக்கைகள் விடுத்தனர்.

இந்தச் சூழ்நிலையில், நேற்று பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக வெளிவந்துள்ள செய்தி மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. மத்திய அரசின் இந்த முடிவினை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் மனதார வரவேற்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

## ஒரே நாளில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.1,640 சரிவு!

சென்னை: மே.2-

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக தங்கம் விலை உயர்ந்து வருகிறது. அட்சய திரிதியை தினத்தன்று (ஏப்ரல் 30) தங்கத்தின் விலை கிராம் ரூ.8,980க்கும், சவரன் ரூ.71,840க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில், சென்னையில் நேற்று (மே 01) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,640 சரிந்து ஒரு சவரன் ரூ.70,200க்கு விற்பனை ஆகிறது. கிராமுக்கு ரூ.205 சரிந்து, ஒரு கிராம் ரூ.8,775க்கு விற்பனை ஆகிறது. தங்கம் விலை இன்று ஒரே நாளில் சவரனுக்கு ரூ.1,640 சரிந்து, நகைப்பிரியர்களுக்கு சற்று நிம்மதி அளித்துள்ளது.



■ மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், சிலைமான் ஊராட்சியில் மே1 உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு கிராமசபை கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா தலைமையில் நடைபெற்றது. கூடுதல் ஆட்சியர் டாக்டர். மோனிகா ராணா உடன் உள்ளார்.




# இலத்தூர் கிராமத்தில் தொழிலாளர் தினத்தினை முன்னிட்டு கிராமசபைக்கூட்டம்

தென்காசி, மே.2-

தென்காசி மாவட்டம் செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இலத்தூர் கிராமத்தில் தொழிலாளர் தினத்தினை முன்னிட்டு இலத்தூர் ஊராட்சிமன்ற தலைவர் முத்துலெட்சுமி தலைமையில் நடைபெற்ற கிராமசபைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்ததாவது கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல் இணைய வழி மனைப்பிரிவு மற்றும் கட்டிட அனுமதி வழங்குதல் சுய சான்றினை அடிப்படையாகக் கொண்டு கட்டிட அனுமதி பெறுதல் வரி மற்றும் வரியில்லா வருவாய் இனங்களை இணைய வழி செலுத்துவதை உறுதிப்படுத்துதல் மற்றும் இதர பொருட்கள் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்தார்.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தொழிலாளர் தின உறுதி மொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் அனைத்து துறை அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

முன்னதாக மரங்களை நட்டு வைத்து தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் வைக்கப்பட்டுள்ள சாதனை விளக்க சிறு புகைப்படக்கண்காட்சி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டார்கள்.

இக்கிராமசபைக் கூட்டத்தில் பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அனிதா மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கோவிந்தன் மாவட்ட ஊராட்சி செயலாளர் சுமதி செங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள்இ பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


■ இராமநாதபுரம் மாவட்டம், புல்லாணி ஊராட்சி ஒன்றியம், மேதலோடை ஊராட்சியில் நேற்று தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் கலந்து கொண்டு உரையாற்றினார். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) வீர் பிரதாப் சிங் உடன் இருந்தார்.


■ பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கொண்டாடப்படும் "தமிழ் வார விழாவில் "அரசு இசைப்பள்ளியின் சார்பில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பாடல்களை நாட்டுப்புற இசைக்கலைஞர்களை கொண்டு பாடி விளக்கிய நிகழ்ச்சியினை பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

# சேலம் கோட்டத்தில் உள்ள 18 அரசுப் போக்குவரத்துப் பணிமனைகளிலும் குளிரூட்டப்பட்ட ஓய்வறைகள் திறப்பு



சேலம், மே.2-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்ட மெய்யனூர் கிளையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மெய்யனூர்இ தம்மம்பட்டி பள்ளப்பட்டி மற்றும் செங்கோடு கிளை பணிமனைகளில் போக்குவரத்துப் பணியாளர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி முன்னிலையில் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் மூலம் மகளிர் பயனடையும் வகையில் விடியல் பயணத் திட்டத்தினைத் தொடங்கி வைத்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அதேபோன்று தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறத்தில் உள்ள பள்ளி மாணவ மாணவிகள் மகளிர் விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் பழைய பேருந்துகளை மாற்றம் செய்து அதற்கு பதிலாக புதிய வகை பேருந்துகளாக இயக்கிடவும் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்கள் மற்றும் ஏற்கனவே இயங்கி வந்த வழித்தடங்களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவை கிடைத்திடவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் போக்குவரத்துப் பணியாளர்கள் ஓய்வெடுக்கும் வகையில் மெய்யனூர் தம்மம்பட்டி பள்ளப்பட்டி மற்றும் செங்கோடு கிளை பணிமனைகளில் பணியாளர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்தை உள்ளடக்கிய சேலம் கோட்டத்தில் மொத்தம் உள்ள 18 அரசுப் போக்குவரத்துப் பணிமனைகளிலும் ரூ.73 இலட்சம் மதிப்பீட்டில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மகளிர் விடியல் பயணம் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டதிலிருந்து தற்பொழுது வரை சேலம் மாவட்டத்தில் மட்டும் 32.18 கோடி மகளிர் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக மலைப் பகுதிகளுக்கான பேருந்துகளில் மட்டும் 14.53 இலட்சம் மகளிர் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோன்று தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் இதுவரை சேலம் மாவட்டத்தில் 82 புதிய புறநகர் பேருந்துகள் மற்றும் 13 புதிய நகரப் பேருந்துகள் பல்வேறு வழித்தடங்களில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் எஸ்.ஜோசப் டயஸ் பொது மேலாளர்கள் பா.கோபால கிருஷ்ணன் த.மோகன்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# அறநிலையத்துறை சார்பில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் அமைச்சர் சேகர்பாபு ஆய்வு



சென்னை: மே.2-

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய ண மண்டபம், பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், கல்லூரி புதிய கட்டடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை அமைச்சர் சேகர்பாபு இன்று (மே 1) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும் அறிவுரைகளை வழங்கினார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னை, எழும்பூர் சீனிவாச பெருமாள் கோயில் சார்பில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய ண மண்டபம், கீழ்ப்பாக்கம், ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ரூ.11.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் கொளத்தூர் பூம்புகார் நகரில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் புதிய கல்லூரி கட்டடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று (மே 1) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் குடமுழுக்கு நடத்துதல், கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பணிகளோடு கல்வி சார்ந்த அறப்பணிகளையும் சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

2024 ஖ 2025 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில் எழும்பூர், சீனிவாச பெருமாள் கோயில் சார்பில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் புதிய ண மண்டபம் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் ரூ. 25 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் புதிய ண மண்டபம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தற்போது 1,035 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வகையில் கடந்தாண்டு ரூ.1.78 கோடி செலவில் பள்ளி கட்டிடங்கள் மராமத்து செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டன. மேலும், இப்பள்ளிக்கு கூடுதலாக ரூ.11.15 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 32 வகுப்பறைகள், ஆசிரியர்கள் ஓய்வறைகள், 5 ஆய்வங்கங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

மயிலாப்பூர், கபாலீசுவரர் கோயில் சார்பில் கொளத்தூரில் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. தமிழக முதல்வர் இக்கல்லூரிக்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் புதிய கல்லூரி கட்டடம் கட்டுவதற்கு கடந்த 2024ல் அடிக்கல் நாட்டினார். வரும் கல்வியாண்டில் கல்லூரி வகுப்புகள் புதிய கட்டடத்தில் நடைபெறும் வகையில் கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு இன்று (மே 1) கோயில்கள் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய ண மண்டபம், பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், கல்லூரி புதிய கட்டடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும், பொறியாளர்களுக்கும் அறிவுரைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சிகளில் மேயர் பிரியா ராஜன் மற்றும் அரசு உயர் அலுவர்கள் கலந்துகொண்டனர், என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# பெண்கள் அனைவரும் உயர்கல்வியில் சேரும்பொழுது கல்வி அறிவும் தனித்திறமைகளையும் வளர்த்து வாழ்வில் சிறந்து விளங்க முடியும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தகவல்



சேலம், மே.2-

சேலம் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சேலம் மாவட்டம் வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம் அத்தனூர்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி பார்வையாளராகக் கலந்து கொண்டு பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் கிராமப்புறங்களை முன்னேற்றத்திற்காக பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறார்கள். வெளிப்படையான கிராம நிர்வாகத்தை உறுதி செய்யும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படுகிறது. அந்தவகையில்தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இன்று நடைபெற்ற கிராம சபைக்கூட்டத்தில் கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் உள்ள 385 கிராம ஊராட்சிகளிலும் இன்றைய தினம் கிராம சபைக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. இக்கிராம சபைக்கூட்டத்தில் கிராம ஊராட்சி மற்றும் பொது நிதி செலவினம் குறித்தும் இணையவழி மனைப்பிரிவு மற்றும் கட்டட அனுமதி வழங்கியது குறித்தும் சுய சான்றிதழினை அடிப்படையாகக் கொண்டு கட்டட அனுமதி பெற்றது குறித்தும் வரி மற்றும் வரியில்லா வருவாய் இனங்களை இணைய வழியில் செலுத்தப்பட்டது குறித்த விவரங்கள் பொதுமக்கள் மத்தியில் விவாதிக்கப்பட்டது.

மேலும் கலைஞரின் கனவு இல்லம் திட்டம்இ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஜல் ஜீவன் திட்டம் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) சுகாதாரம் ஊரக வீடுகளை பழுதுபார்த்தல் திட்டம் ஊரகக் குடியிருப்புத் திட்டம்இ ஊராட்சி வளர்ச்சி குறியீடு மற்றும் அரசின் பிற முக்கிய திட்டங்கள் குறித்தும் தேசிய ஊராட்சிகள் தின முக்கியத்துவம் குறித்தும் கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் குறித்தும் பண்ணை மற்றும் பண்ணை சாரா வாழ்வாதார நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்கள் மத்தியில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

குறிப்பாக உயர் கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. ஒரு நாடு செழித்து தன்னிறைவுடன் திகழ வேண்டுமென்று சொன்னால்இ நாட்டில் உள்ள மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாய் இருப்பது மிகவும் அவசியம். முக்கியமாக கல்வி என்பது பெண்களுக்கு மிகமிக முக்கியம். குறிப்பாகஇ பெண்கள் அனைவரும் உயர்கல்வியில் சேரும்பொழுது கல்வி அறிவும்இ தனித்திறமைகளையும் வளர்த்து வாழ்வில் சிறந்து விளங்க முடியும்.

இந்த கிராம சபைக்கூட்டத்தில் பொதுமக்களால் பல்வேறு இனங்கள் குறித்து கோரிக்கை மனுக்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவிபேசினார்கள்.

முன்னதாகஇ துறை அலுவலர்கள் தங்களது துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைத்தனர்.

இக்கிராம சபைக் கூட்டத்தில்இ வாழப்பாடி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தி.தாமரைச்செல்விஇ முத்தழகன் உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.




■ மதுரை மாநகராட்சி தமுக்கம் மாநாட்டு மையத்தில் மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான ஊக்குவிப்பு இரண்டாம் நாள் பயிற்சி முகாமினை மேயர் தி.இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்து உரையாற்றினார்கள் அருகில் மண்டலத் தலைவர் தி. சரவணபுவனேஸ்வரி , கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன் , கல்வி அலுவலர் ஜெய்சங்கர் , மாமன்ற உறுப்பினர் முருகன் ஆகியோர் உடன் உள்ளனர்

# தேனி கருநாக்கமுத்தன்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் கலந்து கொண்டார்

தேனி, மே.2-

தேனி மாவட்டம், கம்பம் ஊராட்சி ஒன்றியம் கருநாக்கமுத்தன்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், கலந்து கொண்டார்.

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தேனி மாவட்டத்திலுள்ள 130 கிராம ஊராட்சிகளில் இன்றைய தினம் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

இந்தியாவில் உள்ள அனைத்து கிராமங்களிலும் இன்று கிராம சபை கூட்டம் நடைபெறுகிறது. கிராம சபை கூட்டத்தின் நோக்கம் ஒரு கிராமத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளை கண்டறிந்து பொதுமக்களின் முன்னிலையில் விவாதித்து, அதனை செயல்படுத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கிராம சபை கூட்டம் நடத்தப்படுகிறது. இக்கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. கிராமப்புறங்களை விரைவாக முன்னேற்றம் அடைய செய்வதற்கு அரசின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி கற்பிக்கப்படுவதுடன், குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு, எடைக்குறைவு இருப்பின் அதனை சரிசெய்வதற்காக சத்துணவு, சத்துமாவு உள்ளிட்ட உணவுப்பொருள்



வழங்கப்படுகிறது. எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தொடர்ச்சியாக அங்கன்வாடி மையங்களுக்கு அனுப்ப வேண்டும்.

மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, மாணவர்களின் கல்வி தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும், கல்வி உதவித்தொகைகளும் அரசால் வழங்கப்படுகிறது. கல்வி இடைநிற்றல் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். அனைவரும் முறையாக உயர்கல்வி கற்று உயர்ந்த நிலையை அடைய வேண்டும்.

குறிப்பாக, குழந்தை ணத்தை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். அரசு நிர்ணயித்துள்ள 18 வயது பூர்த்தி அடைந்த பின்னரே, பெண்களுக்கு ணம் செய்து வைக்க வேண்டும். இதனால், குறைவான எடையில் குழந்தை பிறத்தல், ஊட்டச்சத்து குறைபாடு உள்ளிட்ட பல்வேறு பின்விளைவுகளை தவிர்க்கலாம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் இலக்கை அடைவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

மேலும் இளம்வயது குறித்து தகவல் தெரிந்தால் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கருநாக்கமுத்தன்பட்டியில் 14 நபர்களுக்கு வீடு கட்டுவதற்கான பணி ஆணைகளையும் மற்றும் கட்டுமான பணிகள் நிறைவுற்ற கலைஞரின் கனவு இல்ல வீட்டிற்கான ஆணைகளை 2 பயனாளிகளுக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் தலா ரூ.2538/ மதிப்பிலான மண்புழு உரபடுகை 2 பயனாளிகளுக்கும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் ரூ.26,000/ மானிய விலையில் கத்தரி நாற்றங்கால் மற்றும் மிளகாய் நாற்றங்கால் 2 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

முன்னதாக, இக்கிராம சபை கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம், தணிக்கை அறிக்கை, சுகாதாரப்பணிகள், வேளாண்மை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் மற்றும் இதர தலைப்புகளிலும் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தி அபிதா ஹனீப், இணை இயக்குநர்கள் தி சாந்தாமணி (வேளாண்மைத்துறை), தி கலைச்செல்வி (சுகாதாரப்பணிகள்), உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செய்யது முகமது, முதன்மை கல்வி அலுவலர் தி இந்திராணி, துணை இயக்குநர்கள் தி நிர்மலா(தோட்டக்கலை), மரு.ராமலிங்கம் (கால்நடை பராமரிப்புத்துறை), உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) முருகையா, மோகன்ராஜ் (மாவட்ட தொழில் மையம்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் தி வளர்மதி (விவசாயம்), அண்ணாதுரை (சத்துணவு), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் நேரு, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் தி சம்பூர்ணம், தாட்கோ மேலாளர் தி சரளா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தி காமாட்சி, மாவட்ட சமூக நல அலுவலர் தி சியாமளாதேவி, உதவி செயற்பொறியாளர் மயில்வாகனன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தி கனி, ஜெயபிரகாசம், வட்டாட்சியர் கண்ணன் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மண்ணிவாக்கம் மற்றும் முடிச்சூர் ஊராட்சியில் மே 1 தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம்





மண்ணிவாக்கம் மே.2

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றிய மண்ணிவாக்கம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கெஜலட்சுமி சண்முகம் மற்றும் துணைத் தலைவர் சுமதி லோகநாதன் தலைமையில் மே1 தொழிலாளர்கள் முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது மண்ணிவாக்கம் ஊராட்சியில் உள்ள அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் திட்ட ஒருங்கிணைப்பாளர் அங்கன்வாடி ஊழியர்கள் சிற்றுண்டி வழங்கும் பொறுப்பாளர்கள் தூய்மை பணியாளர்கள் கிராம சுகாதார செவிலியர்கள் வேளாண்மை துறை அதிகாரிகள் மற்றும் கிராம பொதுமக்கள் காவல்துறையினர் கலந்து கொண்டனர் இந்த கிராம சபை கூட்டத்தில் பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினார் அனைத்தும் கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்றப்படும் என்று ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கெஜலட்சுமி சண்முகம் உறுதியளித்தார் உடன் இருந்த காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.டி.லோகநாதன், ஒன்றிய கவுன்சிலர் வி.சோமசுந்தரம் மற்றும் காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.எஸ் கார்த்திக் மற்றும் வார்டு உறுப்பினர் அமுதா ரங்கநாதன், உஷா பிரபு, பூசாதேவி புன்னியகோட்டி, சுரேஷ், லட்சுமி நாகராஜ் குமார், பத்மாதெய்வசிகாமணி மல்லிகாபார்த்திபன், சேகர், பச்சையம்மாள் அண்ணாதுரை மற்றும் ஊராட்சி செயலாளர் பத்மநாபன் உள்பட பலர் கலந்து கொண்டனர்

அதனைத் தொடர்ந்து தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முடிச்சூர் ஊராட்சியில் மே 1 தொழிலாளர்கள் தினம் முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது இதில் பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்து அதிகாரிகளிடம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்

இதில் ஊராட்சி மன்ற தலைவர் சிந்துலேகா தலைமையில் துணைத் தலைவர் விநாயகமூர்த்தி மற்றும் ஊராட்சி செயலாளர் வாசுதேவன் முன்னிலையில் அரசு துறை சார்ந்த அதிகாரிகள், வார்டு உறுப்பினர்கள் வி.ஆர்.குமார், மணிகண்டன், புனிதா ராஜா, சத்திய சந்திரன், சாந்த குமார், உமா சுகுமார், சரஸ்வதி நாகராஜ், விஜயா, சாந்தி ரமேஷ், முன்னாள் துணைத் தலைவர் தாமோதரன், ஒன்றிய கவுன்சிலர் விசாலாட்சி, கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்

# பயங்கரவாத தாக்குதல் எதிரொலி; தேசிய பாதுகாப்பு ஆலோசனை குழு மாற்றி அமைப்பு

புதுடில்லி: மே.2–

பயங்கரவாத தாக்குதல் எதிரொலியாக, தேசிய பாதுகாப்பு ஆலோசனை அமைப்பை மத்திய அரசு மாற்றி அமைத்தது.

காஷ்மீர் மாநிலம், பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து, எல்லையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது. இன்று டில்லியில் மத்திய அமைச்சரவை குழுவிடம் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், தேசிய பாதுகாப்பு ஆலோசனை அமைப்பை மத்திய அரசு மாற்றி அமைத்தது. தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் குழுவின் தலைவராக 'ரா' உளவு அமைப்பின் முன்னாள் தலைவர் அலோக் ஜோஷி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ராணுவ உயர் அதிகாரிகள் 7 பேரைக் கொண்ட புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு உள்ளது. குழுவில், முன்னாள் மேற்கு விமானப்படை தளபதி ஏர் மார்ஷல், முன்னாள் தெற்கு ராணுவ தளபதி ஏ.கே. சிங், ஓய்வு பெற்ற அதிகாரிகள் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.



# பழங்குடியினர் மக்கள் சாலை மறியல்

நீலகிரி, மே.2

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே உள்ள முதுமலை புலிகள் காப்பகம் முதுகுளி கிராமத்திற்கு அரசு பேருந்து இயக்க வேண்டும் என பழங்குடியின மக்கள் நீண்ட காலமாக கோரிக்கையை முன்வைத்து வந்தனர்.

பழங்குடியினர் மக்கள் கோரிக்கையை முன்வைத்து முதன்முறையாக இன்று அரசு பேருந்து இயக்கப்பட்டது. இந்நிலையில் போஸ்பரா வனத்துறை சோதனை சாவடியில் வனத்துறை என அந்த பேருந்து தடுத்து நிறுத்தினர். இதனால் கொந்தளித்த பழங்குடியினர் மக்கள் வனத்துறையினரை எதிர்த்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.





# புனித மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் முதலாம் ஆண்டு மைக்கல் பிரிமியர் லீக் 2025 கபடி போட்டி

காளையார் கோவில், மே 02

புனித மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் முதலாம் ஆண்டு மைக்கல் பிரிமியர் லீக் 2025 ,கபடி போட்டி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பசும்பொன் குரூப்ஸ் ஆப் கம்பெனி_ சிங்கப்பூர், JP குரூப் ஆப் கம்பெனி_ இந்தியா,JP சினிமாஸ் ஆகியவற்றின் உரிமையாளர் பாலமுருகன் அவர்களும், அசோக்ராஜ் நிறுவனங்களின் உரிமையாளர் ஆரோக்கியராஜ் அவர்களும், DMK கிளைச் செயலாளர் அரங்கநாதன் அவர்களும், ஜோஸ் எர்த் மூவர்ஸ் - பில்டர்ஸ் உரிமையாளர் ஞ்விரி கிளை செயலாளருமான ஜான் அவர்களும், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் காளையார் கோவில் DMK கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆரோக்கியசாமி அவர்களும் இவ் விளையாட்டுப் போட்டிக்கு தலைமை ஏற்று , பரிசுகளை வழங்கிச்சிறப்பித்தனர்.

செக்கக்குடி புனித ஜோசப் பள்ளியின் மாணவர்கள் முதல் பரிசையும், கொல்லங்குடி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் இரண்டாம் பரிசையும், காளையார் கோவில் புனித மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் மாணவர்கள் மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

சிவகங்கை மதுரை ராமநாதபுரம் மாவட்டத்தின் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வினை புனித மைக்கேல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் சேர்மன் Ln. Dr ஸ்டாலின் ஆரோக்கியராஜ் மற்றும் Dr. நிர்மலா நிர்வாகத்தில் பணியாற்றும் முதல்வர்கள் துணை முதல்வர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# புல்லாணி ஊராட்சி ஒன்றியம், மேதலோடை ஊராட்சியில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபைக் கூட்டம்

இராமநாதபுரம், மே.2-

இராமநாதபுரம் மாவட்டம், புல்லாணி ஊராட்சி ஒன்றியம், மேதலோடை ஊராட்சியில் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பங்கேற்று பேசுகையில்,

இன்றைய தினம் தொழிலாளர் தினமாக கடைபிடிக்கப்படுவதையொட்டி சிறப்பு வாய்ந்த கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது. இக்கிராம சபைக் கூட்டத்தில் இந்த ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் தொடர்பான கணக்குகள் கூட்டத்தில் அலுவலரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியியல் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் இக்கூட்டமானது நடைபெறுகின்றது. கிராம சபையின் முக்கிய நோக்கம் பொதுக்கணக்குகளை தெரிந்து கொள்வது ஆகும். வருடத்திற்கு 6 கிராம சபைக் கூட்டம் நடைபெறும். ஒவ்வொரு கூட்டத்திற்கும் கூட்டப்பொருள் தொடர்பாக தெரிவிப்பார்கள். முக்கியத்திட்டங்கள் தொடர்பாக பொதுமக்கள் தெரிந்து கொண்டு பயன்பெறும் நோக்கில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.



இன்றைய தினம் நடைபெறும் கூட்டத்தில் பொதுசுகாதாரத்துறை, அங்கன்வாடி தொடர்பாக கூட்டப்பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கர்ப்பிணி பெண்கள் கர்ப்பகாலத்தில் சாப்பிட வேண்டிய மருந்து, மாத்திரைகள் மற்றும் ஊட்டச்சத்து பொருட்களை அலுவலர்கள் தெரிவிக்கும்படி சாப்பிட்டுவர வேண்டும். 6 மாதம் முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு மாதா மாதம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்துறை மூலமாக உயரம், எடை சரிபார்க்கப்பட்டு வருகின்றது. வயதுக்கு ஏற்ற எடை மற்றும் உயரம் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு அவர்களின் ஆலோசனைப்படி அருகில் உள்ள மையத்திற்கு நேரில் சென்று உரிய ஊட்டச்சத்து பொருட்கள் பெற்று குழந்தைகளுக்கு வழங்கிட வேண்டும். மேலும் அரசின் சார்பில் வழங்கப்படும் அனைத்து ஊட்டச்சத்து மருந்துகளும் அங்கன்வாடி மையத்தில் வழங்கப்படும்.

அதேபோல் ஜல்ஜீவன் மிஷன் திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் நோக்கம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குவது ஆகும். இத்திட்டத்தில் பயன்பெறாதவர்கள் வட்டார வளர்ச்சி அலுவலகத்தை அணுகி உங்களுடைய விபரத்தை தெரிவித்து இணைப்பை பெற்றுக் கொள்ளலாம். பெண்கள் கல்வியை மேம்படுத்திடும் விதமாக புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

தொடர்ந்து இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் மூலம் 5 நபர்களுக்கு முழுப்புலம் பட்டா மாறுதல் பெறுவதற்கான ஆணையினையும், 5 பயனாளிகளுக்கு உட்பிரிவு பட்டா மாறுதல் பெறும் ஆணையினையும், 3 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.2400/- மதிப்பிலான சிறுதளைகள் மற்றும் அங்கக உரங்களையும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் மேதலோடை ஊராட்சி கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் சார்பில் மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோர்களுக்கு தனி நபர் கடனாக 5 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000/- வீதம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கான காசோலையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) வீர் பிரதாப் சிங், , உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பத்பநாதன் , தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் தி.அருண்மொழி , வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தி.இராஜேஸ்வரி , கோட்டை இளங்கோவன் , கீழக்கரை வட்டாட்சியர் ஜமால் முகம்மது மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# முதல்வரிடம் நன்றி தெரிவித்த விஏஓ மாநிலச் செயலாளர்





■ சென்னை தலைமைசெயலகத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மற்றும் வருவாய்த்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து சில கோரிக்கைகளை நிறைவேற்றியமைக்கு நன்றி தெரிவித்தனர் இந்த நிகழ்வில் தமிழக முதல்வரிடம் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மாநில செயலாளர் காரைக்குடி இரா. அருள்ராஜ் (VAO) புத்தகம் பரிசாக வழங்கினார்.

# ரூ.34.00 கோடி மதிப்பீட்டில் 442 சிறு கண்மாய்கள் தூர்வாரும் பணி மருதன் கண்மாயில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்





சிவகங்கை, மே.2-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம் பத்தூர் ஊராட்சி ஒன்றியம் காட்டாம்பூர் ஊராட்சிக்குட்பட்ட கொளுஞ்சிபட்டி கிராம பகுதியில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் சிறுபாசன கண்மாய்கள் புத்துயிர் ஊட்டுதல் திட்டம் 2024-2025ன் கீழ் மருதன் கண்மாய் தூர்வாருதல் மற்றும் கரை பலப்படுத்துதல் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் தி ஆஷா அஜித் தலைமையில் கொடியசைத்து தொடங்கி வைத்து தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் நீர்வள ஆதாரங்களை சீரமைத்து நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்திடும் பொருட்டு தமிழகம் முழுவதும் நீர்நிலைகளை பாதுகாத்திட துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில் சிற்றாறுகள் ஏரிகள் குளங்கள் மற்றும் குட்டைகள் அதிகம் நிறைந்த மாவட்டமாக திகழ்ந்து வரும் சிவகங்கை மாவட்டத்தில் மழைக்காலங்களில் பெறப்படும் தண்ணீரை வீணாக்காமல் சேமிப்பதற்கு ஏதுவாக வரத்துவாய்கால் கால்வாய்கள் ஏரிகள் மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகளை புணரமைத்தல் பலப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் கலுங்குகள் மதகுகளை மறுகட்டுமானம் செய்தல் நீர்வழிகளில் அடைந்கும் செடிகளை அகற்றுதல் நீர்நிலைகளில் உள்ள சீமைக்கருவேல் மரங்களை அகற்றுதல் போன்ற பல்வேறுப் பணிகள் தொடர்ந்து மாவட்ட முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் சிறுபாசன கண்மாய்கள் புத்துயிர் ஊட்டுதல் திட்டம் 2024-2025ன் கீழ் சிவகங்கை மாவட்டத்தில் மொத்தம் ரூ.34.00 கோடி மதிப்பீட்டில் 442 சிறு கண்மாய்கள் தூர்வாரும் பணி மேற்கொள்வதற்கென அரசாணை பெறப்பட்டு சிறு கண்மாய்களில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் தொடக்கமாக இன்றையதினம் பத்தூர் ஊராட்சி ஒன்றியம் காட்டாம்பூர் ஊராட்சிக்குட்பட்ட கொளுஞ்சிபட்டி கிராமத்திலுள்ள மருதன் கண்மாயில் ரூ.04.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள கண்மாய் தூர்வாருதல் மற்றும் கரைகளை பலப்படுத்தும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதேபோன்று மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள சிறு கண்மாய்கள் சீரமைப்பு பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுதவிர மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பெரும் முயற்சியின் காரணமாக அரசுடன் இணைந்து நீர்நிலைகளை பாதுகாத்திட பல்வேறு தனியார் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் தங்களது பங்களிப்பை அளித்திட முன்வந்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நீர்நிலைகளை சீரமைக்கும் பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர்.

அதில் பாலாறு சருகனியாறு விருசுழியாறு ஆகிய நீர்நிலை பகுதிகளில் நன்கொடையாளர்களின் பங்களிப்புடன் நீர்நிலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீர்நிலை ஆதாரங்களை மேம்படுத்தி நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்காகவும் மற்றும் விவசாய பெருங்குடி மக்களுக்கு பயனுள்ள வகையிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சீரிய முயற்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்நடவடிக்கைகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் மற்றும் நன்கொடையாளர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அந்தந்த பகுதிகளைச் சார்ந்த பொதுமக்கள் தங்களது பகுதிகளிலுள்ள நீர்நிலைகளை பேணிக்காத்து தூய்மையான முறையில் பராமரித்து கொள்வதும் அவர்களின் தலையாய கடமையாகும். இதனை கருத்தில் கொண்டு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்கி நீர்நிலைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் தி கா.வானதி செயற்பொறியாளர் தி அனுராதா முன்னாள் ஊராட்சி ஒன்றிக்குழுத்தலைவர் சண்முகவடிவேல் மற்றும் உதவி பொறியாளர் இராமசாமி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கடலூர் சில்வர் பீச்சில் தொழிலாளர் தினத்தன்று மணல் சிற்பக் கண்காட்சி

கடலூர் மே.2

கடலூர் சில்வர் பீச்சில் ஏ.ஆர்.எல்.எம் வித்யாலயம் பள்ளியின் மணல் சிற்பக் காட்சி, தொழிலாளர் தினத்தன்று ஒரு சக்திவாய்ந்த நினைவை குறிக்கிறது.

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே 1 ஆம் தேதி, உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்களின் அர்ப்பணிப்பு, நெகிழ்வு மற்றும் கண்ணியத்தைக் கொண்டாடும் வகையில், சில்வர் பீச்சில் அர்த்தமுள்ள ஈர்க்கும் மணல் சிற்பக் காட்சியைப் பார்வைக்கு ஏ.ஆர்.எல்.எம் வித்யாலயம் பள்ளி ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வை ARLM வித்யாலயம் பள்ளியின் செயலாளர் D.சத்தியநாராயணன் தொடங்கி வைத்தார். அவர் மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் முயற்சிகளைப் பாராட்டினார் . மேலும் மாணவர்களை வழிநடத்திய கலைத் துறை ஆசிரியர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பைப் பாராட்டினார். துல்லியம் மற்றும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட சிற்பங்கள் கடின உழைப்பின் மதிப்பு மற்றும் உழைப்பின் மரியாதை பற்றிய சக்திவாய்ந்த செய்திகளை வெளிப்படுத்தின.

கடற்கரையோர மணல் சிற்பக் காட்சி பெற்றோர்கள், பொது மக்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் என பல்வேறு பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது. அனைவரும் பிரமிப்பூட்டும் கலைப்படைப்புகளைக் காணவும், தொழிலாளர் தினத்தின் உணர்வைப் பிரதிபலிக்கவும் கூடியிருந்தனர். இந்த நிகழ்வு மாணவர்களின் கலைத் திறமைகளை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாமல், தொழிலாளர் வர்க்கத்தின் மீது ஆழ்ந்த மரியாதையையும் ஏற்படுத்தியது.


படைப்பாற்றல் ,சமூக ஈடுபாடு மற்றும் மதிப்புகள் சார்ந்த கல்வி மூலம் ARLM வித்யாலயம் பள்ளி தொடர்ந்து ஊக்கமளிக்கிறது.

# அமெரிக்கஇந்தியா வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம்

## சொல்கிறார் அதிபர் டிரம்ப்

**வாஷிங்டன்: மே.2–**

'அமெரிக்கஇந்தியா இடையே வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது' என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க அதிபர் டிரம்ப் பரஸ்பர வரி என்ற பெயரில் அனைத்து நாடுகளுக்கான இறக்குமதி வரியை உயர்த்தினார். இதற்கான அறிவிப்பை ஏப்ரல் 2ம் தேதி வெளியிட்டார். பின் அமெரிக்காவுடன் பேச்சு நடத்திய 60க்கும் மேற்பட்ட நாடுகளின் வரியை நிறுத்தி வைத்தார்.

இந்நிலையில், அமெரிக்காவில், வெள்ளை மாளிகைக்கு வெளியே செய்தியாளர்களிடம் டொனால்டு டிரம்ப் கூறியதாவது: இந்தியாவுடனான வரி பேச்சு வார்த்தை சிறப்பாக நடந்து வருகிறது. அமெரிக்க இந்தியா வர்த்தகப் பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

விரைவில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும். 90 நாள் வரி இடைநிறுத்தத்தின் போது ஆப்பிரிக்காவிற்குச் சென்று ஆஸ்திரேலிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளேன். அதை அறிவிக்க நாட்டின் ஒப்புதலுக்காகக் காத்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.




# தாம்பரம் வட்டார ஐக்கிய ஜமாத் சார்பாக வக்ஃப் சட்டத்தை கண்டித்து மாபெரும் பேரணி மற்றும் கண்டன ஆர்பாட்டம்

தாம்பரம். மே.02

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டார ஐக்கிய ஜமாத் சார்பாக ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள முஸ்லிம்களின் சொத்துக்களை சூரையாடும் திட்டமான, வக்ஃப் த சட்டத்தை கண்டித்து தாம்பரத்தில் மாபெரும் பேரணி மற்றும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.

இதில் மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம் எச். ஜவாஹிருல்லா எம் எல் ஏ மற்றும் விசிக,தலைவர் தொல்.ாவளவன் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்கள்.

மேலும் இந்நிகழ்வில் மனிதநேய மக்கள் கட்சி மாநில துணைப் பொதுச் செயலாளர் தாம்பரம் எம்.யாக்கூப், விசிக துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு, தாம்பரம் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் எம்.கே.நாகூர் கனி, செங்கல்பட்டு மாவட்ட தலைவர் எஸ்.கே. ஜாகிர் உசேன், தாம்பரம் மாநகர செயலாளர் சாமுவேல் எபினேசர், சமூக ஊடகப்பிரிவு மாநில துணைச் செயலாளர் கதிரவன் மற்றும்

தாம்பரம் வட்டார ஐக்கிய ஜமாத் நிர்வாகிகள், மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்கள்.

இதில் ஜமாத் நிர்வாகிகள் ஆண்கள், பெண்கள் என ஆயிரத்திற்கும் மேற்ப்பட்டோர் பங்கு கொண்டு தங்களின் கண்டனங்களை பதிவு செய்தார்கள்.

# உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு துப்புரவு பெண் பணியாளர்கள், முடி திருத்துபவர் ஆட்டோ ஓட்டுநர்களை காரில் அழைத்து சென்று உணவகத்தில் விருந்துவைத்த எம்.எல்.ஏ

## ஜவுளி கடைக்கு கூட்டிச்சென்று பிடித்த துணிகளை எடுக்க சொல்லி அதனையே எடுத்து கொடுத்து அழகு பார்த்த எம்எல்ஏ





மானாமதுரை, மே.02

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உழைப்பாளர்கள் தினத்தை முன்னிட்டு அவர்களை கௌரவிக்கும் விதமாக துப்புரவு பெண் பணியாளர்கள், முடி திருத்துபவர் ,ஆட்டோ ஓட்டுநர்களை

மானாமதுரை உள்ள் தனியார் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று சாப்பிட வைத்து அழகு பார்த்த எம் எல் ஏ தமிழரசி

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றஉறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் நேற்று மே 1ஆம் தேதி தொழிலாளர் தினத்தை முன்னிட்டு அவர்களை கௌரவிக்கும் விதமாக தன்னுடைய காரில் துப்புரவு பெண் பணியாளர்களை ஏற்றி வந்து மானாமதுரை பழனி சைவ உணவகத்தில் வயிறார சாப்பிட வைத்து அழகு பார்த்தார் துப்புரவு பணியாளர்கள் சிலர் உணவகத்தில் உட்காருவதற்கு கூச்சப்பட்டு நின்று நிலையில் அவர்களை அழைத்து அருகில் உட்கார வைத்து அவர்களிடம் சகஜமாக பேசி சாப்பிட வைத்தது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது

இதில் முடி திருத்துபவர்கள்,, ஆட்டோ டிரைவர்கள் 50க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுடன் எம்எல்ஏ தமிழரசியும் சேர்ந்து சாப்பிட்டார் சாப்பிட்டு முடித்த அனைத்து தொழிலாளர்களையும் அழைத்துக் கொண்டு ஜவுளி கடைக்கு சென்று அவர்களுக்கு பிடித்த துணிகளை எடுக்கச் சொல்லி அழகு பார்த்தார் இதில் துப்புரவு பெண் பணியாளர்கள் உட்பட பலரும் மகிழ்ச்சி அடைந்தனர்..



■ செங்கல்பட்டு மாவட்டம், பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் தங்கியுள்ளவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், மதிய உணவளித்து, அவர்களுடன் உரையாடினார். இதில் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் கதிர்வேலு, மற்றும் அரசு மறுவாழ்வு இல்ல பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161